**தலைப்பு 292 – கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 292 - கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 24 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 24 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்படுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

**கணக்கீட்டுக் குறைபாடுகள்**

**(அ) மீண்டெழும் செலவினம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | செலவின பொழிப்பு SA - 10 படிவத்தின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 செலவின விடயங்களின் செலவினங்களின் மொத்தம் ரூபா 258,306,686 என குறிப்பிடப்பட்டிருந்த போதும் திணைக்களத்தின் செலவின பேரேட்டின் பிரகாரம் அது ரூபா 88,218,525 ஆக இருந்தமையால் ரூபா 170,294,265 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | செலவின பேரேட்டினை சரியாக பராமரிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதாக | திணைக்களப் புத்தகங்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ii) | செலவின பொழிப்பு SA - 10 படிவத்தின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 செலவின விடயங்களின் சேமிப்புக்களின் மொத்தம் ரூபா 23,193,310 என குறிப்பிடப்பட்டிருந்த போதும் திணைக்களத்தின் செலவின பேரேட்டின் பிரகாரம் அது ரூபா 38,281,471 ஆக இருந்தமையால் ரூபா 15,294,267 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | செலவின பேரேட்டினை சரியாக பராமரிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதாக | திணைக்களப் புத்தகங்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கையிலுள்ள பட்டியல் ரூபா 2,911,513 என நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப் பட்ட போதும் தெரிவு பரிசோதனையின் பிரகாரம் ரூபா 6,034,453 ஆன பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டிருக்கவில்லை | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிஏற்பாடு போதாமை மற்றும் உறுதிச்சீட்டுக்களில் குறைபாடுகள் காரணமாக CIGAS பொறுப்பு பதிவேட்டில் பதிவு செய்வதற்கு முடியாதிருந்ததாக | நிதிக் கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

**(ஆ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டில் அரச கணக்குகள் திணைக்களத்திடமிருந்து கிடைத்த 04 கெப் வண்டிகளுக்கு ரூபா 1,400,000 செலவு செய்து பொருத்தப்பட்ட 04 கெனபிகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கவில்லை. | சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**(இ) பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்களை முறையாக பரீட்சிக்ககூடிய வகையில் பொறுப்புக்கள் பதிவேடொன்றில் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 2,911,513 தொகை பொறுப்புக்கள் பதிவேடொன்றில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | செலவினத்திற்குரிய நிதிஏற்பாடு மற்றும் செலவினம் பதிவு செய்யப்பட்டு ஒதுக்கீட்டு செலவினப் பதிவேடு சமப்படுத்தப்பட்டதாக | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

| அவதானிப்பு | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி<br>ரூபா | இணங்காமை | | |
| இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பந்தி | 16,066,323 | கல்வி, பயிற்சி அல்லது கடமை செயற்பாடு களுக்காக வெளிநாடு சென்ற 08 உத்தி யோகத்தர்கள் மீண்டும் சேவைக்கு அறிக்கையிடாமை | அறவிடுவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அம்முயற்சிகள் தொடர்ந்தும் மேற் கொள்ளப்பட்டு வருவதாக | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயன் முன்னேற்த்தை பரீட்சிக்கும் போது திட்டமிடப்பட்ட 07 செயற்பாடுகளின் செயன் முன்னேற்றம் 50 சதவீதத்தை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டன. | கருத்து தெரிவிக்கப்பட்டி ருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | குண்டசாலை கால்நடைக் புலனாய்வு நிலையத்தில் மீளாய்வாண்டின் வருடாந்த இலக்கு மற்றும் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயன் முன்னேற்றத்தை பரீட்சித்த போது 18 செயற்பாடுகளின் செயன் முன்னேற்றம் 0 முதல் 55 சதவீதம் வரையான குறைந்த மட்டத்தில் காணப்பட்டன. | கருத்து தெரிவிக்கப்பட்டி ருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

**3.2 எதிர்பார்த்த நலன்களை அடையாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் தோல் மற்றும் வாய் நோய் 359,760 தடுப்பூசிகளை உள்நாட்டில் உற்பத்தி வடிகளாக உள்நாட்டு தேவையின் 25 சதவீதம் அளவிலான குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் இறக்குமதி 51 சதவீதம் முதல் 91 சதவீதம் வரை அளவிலான 2,299,900 வடிகள் இறக்குமதி செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 89,344,215 ஆன செலவினமொன்று மேற்கொள்ளப் பட்டிருந்தது. அதன் பிரகாரம் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்காமல் இறக்குமதியை அதிகரிக்கும் போக்கொன்று அவதானிக்கப்பட்டது. | தடுப்பூசிகளை உற்பத்தி செய்வதற்கு தேவையான இரசாயனப் பொருட்கள் பற்றாக்குறை காரணமாக இறக்குமதி அதிகரித்ததாக | உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்து இறக்குமதியை கட்டுப்படு:த்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாமல் விட்டுவிடுதல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொல்கொல்ல கால்நடை கட்டுப்பாட்டு கிருமிநீக்கல் ஆய்வுகூடத்தை மேம்படுத்துதல் மற்றும் திருத்த வேலைகளுகாக 2018 ஆகஸ்ட் 24 ஆந் திகதி தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக் காரரொருவருக்கு 2018 திசெம்பர் 29 ஆம் திகதிக்கு முன்னர் வேலையை பூர்த்தி செய்வதற்காக ரூபா 3,273,873 ஆன பெறுமதிக்கு உடன்படிக்கை செய்யப்பட்டு ஒப்பந்தத்தை வழங்கி மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவா்று ரூபா 1,382,766 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் திருத்த வேலைகளைப் பூர்த்தி செய்யாமல் ஒப்பந்தக்காரர் ஒப்பந்தத்தை விட்டு இருக்கையில் 2020 ஆகஸ்ட் 11 ஆந் திகதி ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஆய்வுகூடத்தின் திருத்த வேலைகளை முறையாக மேற்கொள்ளாமை காரணமாக உரிய வகையில் கிருமி நீக்கம் செயற்பாட்டினை மேற்கொள்வதற்கு முடியாமல் இருந்தமை மற்றும் ஆய்வுகூடத்தில் ஆராய்ச்சி நடவடிக்கைகள், தடுப்பூசி திரவங்கள் உற்பத்தி | தற்போது காணப்படும் தேவைகளை இனங்கண்டு மதிப்பீடு செய்து நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | முறையான மேற்பார்வையுடன் திருத்த வேலைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| செயற்பாடுகள் மிகவும் சிரமத்துடன் மேற்கொள்ளப்படுவது அவதானிக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது மீண்டும் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) :கால்நடை ஆராய்ச்சி நிறுவனத்திற்கு முன்னால் உள்ள அரசின் வீடொன்றை திருத்தம் செய்வதற்காக 2018 செப்தம்பர் 22 ஆந் தேதி வேலை ஆரம்பிக்கப்பட்டு 2019 பெப்ரவரி 20 ஆந் திகதிக்கு முன்னர் வேலைகளை பூர்த்தி செய்வதற்காக ரூபா 3,334,567 பெறுமதிக்கு உடன்படிக்கை செய்து ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. இந்நிர்மாணத்தின் வேலைகள் 35சதவீதம் அளவில் நிர்மாணிக்கப்பட இருக்கையில் ஒப்பந்தக்காரரால் ஒப்பந்தம் கைவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையில் அரசின் வீட்டு அரசின் வீட்டு வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்து பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை | ஏற்றுக்கொள்வதாகவும் தற்போது காணப்படும் தேவைகளை இனங்கண்டு மதிப்பீடு செய்து நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | முறையான மேற்பார்வையுடன் திருத்த வேலைகளைப் பூர்த்தி செய்து பயன்பாட்டிற்கு எடுத்தல் வேண்டும். |

### 3.4 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 16(2) பிரிவின் பிரகாரம் வருடாந்த நிதிக் கூற்றுக்களுடன் செயலாற்றல் அறிக்கை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்வரும் காலத்தில் நிதிக் கூற்றுக்கள் வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் கணக்காய்விற்காக சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 467,236 ஆன பொறிகள் மற்றும் இயந்திரங்கள் உபகரணங்கள் மற்றும் பெறுமதி இனங்கான முடியாத 3 இயந்திரங்கள் இயந்திர உபகரணங்கள் என்பன 02 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் விளைவற்று அல்லது குறைப்பயன்பாட்டுன் காணப்பட்டன. | 2 Electronic Treadmill உபகரணங்களை திருத்தம் செய்ய முடியாததால் கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் எதிர்காலத்தில் தேவையான போதியளவு நிதி ஏற்பாடு கிடைத்த பின்னர் எஞ்சிய உபகரணங்களை திருத்தம் செய்வதாகவும் | கைதவிர்க்க வேண்டிய சொத்துக்களை கைதவிர்ப்பதற்கும் எஞ்சிய உபகரணங்களை திருத்தி பயன்பாட்டுக்கு எடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**3.6 நட்டங்கள் மற்றும் சேதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இம்புலந்தண்ட ஆடுகள் இன விருத்தி நிலையத்தில் 2022 ஜனவரி 7 ஆந் திகதி முதல் 2022 செப்தம்பர் 29 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் ரூபா 1,483,020 ஆன ஆடுகள் மற்றும் 13 பெண் ஆடுகள் மரணித்து இருந்த போதும் அது தொடர்பாக நிதி பிரமாணம் 104(4) இன் பிரகாரம் முழுமையான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | மரணித்திருந்த சில விலங்குகள் தொடர்பாக இதுவரை தாபனப் பிரிவுக்கு அறிக்கையிடப்பட்டு இருக்கவில்லை என்பதாக | நிதி பிரமாணங்களின் பிரகாரம் குறித்த பரிசோதனைகளை மேற்கொண்டு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |

**3.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் 02 கட்டங்களின் கீழ் ரூபா 15,072,388 செலவிடப்பட்டு தொடர்கல்வி நிறுவனத்திற்கு சொந்தமான சிற்றுண்டிச் சாலையை விரிவாக்கி கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு இருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையிலும் கட்டிடங்கள் பயன்பாட்டுக்கு எடுக்கப்படாமல் விளைவற்று காணப்பட்டன இதன் காரணமாக கட்டிடங்களில் பொருத்தப்பட்டு இருந்த ரூபா 1,613,051 ஆன உபகரணங்கள் மற்றும் பாகங்கள் பயன்பாடு இன்றி உத்தரவாத காலம் கடந்திருந்தமை காற்றுச் சீராக்கிகள் செயலற்றுப் போனமை காரணமாக விளைவற்று காணப்பட்டன. | கட்டிடங்களுக்காக தளபாடங்கள் கொள்வனவு செய்வதற்கு 2022 ஆம் ஆண்டின் போது முடியாத இருந்ததாகவும் சில சந்தர்ப்பங்களில் செய்முறை பயிற்சி பரீட்சைகளுக்காக கட்டிடம் பயன்படுத்தப்படுவதாகவும் | கட்டிடங்கள் செயற்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும் |

**3.8 முகாமைத்துவ பலவீனங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உயர்வகையான ஆடுகளை இனவிருத்தி செய்து விவசாயிகளுக்கும் பண்ணை களுக்கும் வழங்கும் நோக்கில் 2019 ஏப்ரல் மாதத்தின் போது போயர் வகையிலான 10 ஆடுகளும் 90 பெண் ஆடுகளும் ரூபா 34,983,630 செலவ-னம் மேற்கொள்ளப்பட்டு அவுஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி | இறக்குமதி செய்யப்படும் நாட்டில் உள்ள சுற்றாடல் நிலைமைகளுக்கு ஒத்துப் போகும் வகையில் இவ்வாறான கால்நடைகள் மரணிப்பதை எதிர்பார்த்த | கால்நடைகளின் பாரம்பரிய நிலைமைகளை பொருத்தமான மட்டத்தில் மதிப்பீடு செய்து விலங்குகளை |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டிருந்ததுடன் நாட்டில் சூழல் நிலைமை களுக்கு ஈடு கொடுக்காத காரணத்தினால் 2022 ஒக்டோபர் 13 ஆம் திகதி ரூபா 11,532,938 ஆன இறக்குமதி செய்யப்பட்ட 06 ஆண் ஆடுகள் மற்றும் 25 பெண் ஆடுகள் உட்பட 31 கால்நடைகள் மரணித்திருந்தன. கால் நடைகளின் பாரம்பரிய நிலைத்திரு தன்மைக்கு பொருத்தமான மட்டத்தில் மதிப்பீடு செய்யாமல் கால்நடைகளை இறக்குமதி செய்து வைத்திருந்த மூலம் இறக்குமதி செய்யப்பட்ட 04 பெண் ஆடுகள் நீண்ட காலமாக நோய்வாய்ப்பட்டிருந்ததுடன் பல்வேறு வகையான வைரஸ் தொற்றலுக்கும் உட்பட்ட 33 கால்நடைகளுக்கு எதிர்பாராத வகையிலான நோய்கள் தொற்றி இருந்தன. அவ்வாறே 2019 ஆம் ஆண்டு முதல் மீளாய் வாண்டின் இறுதி திகதி வரையில் 29 கால்நடைகள் அளவில் மாத்திரம் வெளிக்களத்திற்கு விடுவிக்க கூடியதாக இருந்ததால் இச் செயற்திட்டத்தின் நோக்கங் கங்களை நிறைவேற்றி இருக்கவில்லை. | நிலைமை ஒன்றாக | இறக்குமதி செய்ய வேண்டும் |

**4. மனிதவள முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணி உள்ளவாறான பதவியணியுடன் ஒப்பிடும் போது 206 வெற்றிடங்கள் காணப்பட்டன. அதற்கு இடையே சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் 23 பதவிகளில் 65 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளின் எண்ணிக்கை 120 ஆக இருந்த போதும் 133 பேர் இணைக்கப்பட்டிருந்தனர். ஆரம்ப மட்டத்தில் 112 வெற்றிடங்கள் காணப்பட்டதால் வெளிக்கள கடமைகளை மேற்கொள்வதில் சிக்கல்கள் உருவாகியிருந்தன | தற்போது பதில் கடமைக்காக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த உத்தியோகத்தர்களை அங்கீகரித்து தருமாறு கேட்கப்பட்டுள்ளதாக | தேவைப்பாடுகளை அடிப்படையாக கொண்டு வெற்றிடங்களை நிரப்புவதற்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |